**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.258/2021 பி.வா.சா.1 கோபால்சாமி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 02.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வாதி 1ம் அயிட்ட சொத்திற்கு செல்ல 2ம் அயிட்ட சொத்தை வண்டி தடமாக பயன்படுத்த கோரி தான் இவ்வழக்கை தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரிதான். என் பெற்றோர் தர்மலிங்கமும் மாராத்தாளும் சேர்ந்து வாதியின் தாயார் மாராத்தாளுக்கு ஆதரவாக வா.சா.ஆ. 2 கிரைய பத்திரம் ஏற்படுத்தினர் என்றால் சரிதான்.அதை நான் படித்து உள்ளேன். வா.சா.ஆ. 2 கிரையம் ரூ. 300 க்காக 20-05-1976 ல் எழுதப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 கிரைய சாசனத்தில் *"எங்களுக்காவது எங்களுடைய வாரிசுகளுக்காவது யாதொரு பாத்திய சம்மந்தமும் பின் தொடர்ச்சியும் இல்லை"* என கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ 2 கிரைய சாசனத்தில் மேற்படி தடத்தின் வழியாக நாங்களும் வண்டி , ஆள், கால்நடை கோட்டேர் முதலியனவைகளை ஓட்டிக் கொண்டு போக வர உள்ள தடபாத்தியம் எங்களுக்கு இருக்கிறது என கோரியுள்ளோம் என்றால் தடத்தை பயன்படுத்த இரு தரப்பும் பயன்படுத்தி கொள்ளலாம் என எழுதியுள்ளோம். மேற்படி தடத்தில் எங்களுக்கு கால்நடை மேய்த்துக்கொள்ள உரிமை இல்லை என எழுதியுள்ளோம் என்றால் சரிதான். எங்கள் பூமி மாக்கினாம்பட்டி சோலபாளையம் கிழமேல் சாலைக்கு வடபுறமாக அமைந்துள்ளது என்றால் சரிதான். எங்கள் பூமிக்கு வடபுறத்தில் தான் வழக்கு 2ம் அயிட்ட சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கு 2ம் அயிட்ட சொத்திற்கு கிழபுறம் வாதியின் வழக்கு 1ம் அயிட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ. 2 கிரைய சாசனத்தில் *"க.ச.79 B2 க.ச. 80 காலை பங்கு பூமியில் கிணர் வெட்டி அதில் இருந்து மேல் கண்ட தடத்தில் பூமிக்கடியில் குழாய் போட்டு உங்கள் கணவர் பங்கு பூமிக்கு கொண்டு போவதில் எங்களுக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை* "என கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொற்றொடருக்கு அடுத்து அதில் *"அப்படி நாங்கள் ஏதாவது ஆட்சேபணை செய்தால் அதனால் ஏற்படும் நஷ்டத்தை எங்களாலும் எங்கள் சொத்துக்களாலும் வசூல் செய்து கொள்ளலாம்* "என கண்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதனை வழக்கிற்காக பொய்யாக மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ 2 ஆவணத்தில் *"ஒரு சமயம் PAP தண்ணீர் வந்தால் அதை மேற்படி தடத்தில் வழியாக எங்கள் பூமிக்கு வாய்க்கால் பிடித்துக்கொள்ளும் பாத்தியம் இருவருக்கும் இருக்கிறது.* "என கண்டுள்ளது என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ. 2 கிரைய சாசனத்தில் மேற்படி தடத்தை விற்க தங்களுக்கு பாத்தியம் இல்லை என என் பெற்றோர் எழுதியுள்ளனர் என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 கிரைய சாசனத்தில் "*PAP தண்ணீர் வந்தால் யார் பங்கில் மடை வைத்தாலும் அதில் இருந்து ஒருவர் பங்கு வழியாக மற்றவர் பங்குக்கு PAP தண்ணீர் கொண்டு போக வாய்க்கால் விட்டு விட வேண்டியது.* " என கண்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதனை வழக்கிற்காக பொய்யாக மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

5) வா.சா.ஆ. 2 கிரைய சாசனத்தில் *"13 லிங்ஸ்க்கு தென்புறம் கிழமேலாக வண்டித்தடத்திலும் தென்புறத்திலும் மண் எடுத்து ஏரி போட வேண்டியது* "என கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நாளது தேதி வரை அவ்வாறு மண் போடப்படவில்லை. நாளது தேதி வரை அவ்வாறு மண் போடப்படவில்லை என என் எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வாசகத்தை என் எதிர்வழக்குரையில் குறிப்பிடாமல்

குறிப்பிட்டதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதலாவது பரிகாரமாக கோரியுள்ளவாறு ஏரி அமைத்து தர நாங்கள் கடமை பட்டவர்கள் என்றால் சரியல்ல.

6) இவ்வழக்கு தாக்கல் செய்யும் முன் வாதி கொடுத்த புகாரின் பெயரில் என் மீதும் என் மனைவி மீதும் வா.சா.ஆ 6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி முதல் தகவல் அறிக்கையிலிருந்து எங்கள் இடையூறு நிருபிக்கப்பட்டதால் வாதிக்கு அவர் கோரிய 2வது பரிகாரமான நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

7) வழக்கு 2ம் அயிட்ட வண்டி தடம் கிழமேல் வண்டி தடம் என்றால் சரிதான். அந்த வண்டி தடத்தை ஒட்டி தென்புறத்தில் வேலி அமைக்க முற்பட்டேன் என்றால் சரியல்ல. ஆனால் பாதுகாப்பு கருதி எதிர் காலத்தில் வேலி அமைப்பேன். அவ்வாறு எதிர் காலத்தில் நான் வேலி அமைக்க கூடாது எனவும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு 2ம் அயிட்ட சொத்திற்கு தென்புறத்தில் ஏரியும் பிஏபி வாய்க்காலும் செல்வதால் தடத்தை ஒட்டி நான் வேலி அமைத்தால் அவற்றை வாதி அனுபவிக்க இயலாமல் பாதிப்பு ஏற்படும் என்பதால் நான் வழக்கு 2ம் அயிட்ட சொத்திற்கு தென்புறத்தில் வேலி அமைக்க எனக்கு பாத்தியம் கிடையாது என்றால் சரியல்ல. வண்டி தடத்தை விட்டு விட்டு என் சொத்திற்குள் நான் வேலி அமைக்க எனக்கு உரிமை உள்ளது.

8) நான் குற்ற நடவடிக்கையில் ஈடுப்பட்டு வா.சா.ஆ. 7 முதல் வா.சா.ஆ. 9 விபத்து பதிவேடுகளில் குறிப்பிட்டு உள்ள கொடுங்காயங்களை ஏற்படுத்தியுள்ளதால் வாதிக்கு அவர் கோரிய பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி